# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டு தரநிர்ணயக்குழுவின் மதிப்பீட்டில் 'A+' தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

## பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி–620024

**முனைவர் சு.சீனிவாசராகவன்,** எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்ஸி., பிஎச்.டி.,
**தேர்வு நெறியாளர் (பொ)**

**தொலைபேசி : 0431- 2407016/ 2407060**
**தொலை நகலி: 0431 - 2407444**
**மின்னஞ்சல் : coe@bdu.ac.in**
**வலைதளம் : www.bdu.ac.in**

---

**ந.க. எண்: தே.பி./இளநிலை/செய்முறைத்தேர்வுகள் /நவம்பர் 2023/ நாள்:22.09.2023**

பெறுபவர்

முதல்வர்
பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் (தன்னாட்சி பெறாத கல்லூரிகள்)

அய்யா/அம்மையீர்,

**பொருள்:** இளநிலைத் தேர்வுப் பிரிவு – நவம்பர் 2023–ல் நடைபெறவிருக்கும் பல்கலைக்கழக இளநிலை பட்டப்படிப்பு பாடங்களுக்கான செய்முறை தேர்வுகளுக்கு தேர்வுக் கால அட்டவணை - தெரிவித்தல் - தொடர்பாக.

**பார்வை:** துணைவேந்தர் அவர்களின் ஆணை நாள்: 21.09.2023

---------

பார்வையில் காணும் துணைவேந்தர் அவர்களின் ஆனையின்படி பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருக்கும் நவம்பர் 2023-ஆம் ஆண்டு இளநிலை பட்டப்படிப்புகளுக்கான செய்முறைத் தேர்வுகளின் தேர்வுக் கால அட்டவணை கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | பாடப்பிரிவுகள் | செய்முறைத் தேர்வுகள் துவங்கும் நாள் | செய்முறைத் தேர்வுகள் முடிவுறும் நாள் | செய்முறைத்தேர்வு மதிப்பெண்களை New Portal-ல் பதிவேற்றம் செய்ய வேண்டிய நாள் | அனைத்து எழுத்துத் தேர்வுகளுக்கான அகமதிப்பெண்கள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | B.A/B.B.A/B.Com | 16.10.2023 | 21.10.2023 | தேர்வு நடைபெறும் நாள் அன்றே | 10.11.2023 |
| 2 | B.Sc., | 16.10.2023 | 04.11.2023 | தேர்வு நடைபெறும் நாள் அன்றே | 10.11.2023 |

செய்முறைத் தேர்வுகள் (Practical exams for B.A., B.B.A.,B.Sc., & B.Com Courses) நடத்திடும் பொருட்டு அதற்கான செய்முறைத்தேர்வு கால அட்டவணையை மூன்று நகல்கள் தயார் செய்து **05.10.2023 (வியாழக்கிழமை) தேதிக்குள் இவ்வலுவலகதிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். கல்லூரிகளில் இருந்து பெறப்படும் செய்முறைத் தேர்வுக்கால அட்டவணையை தேர்வு நெறியாளரின் ஒப்பத்துடன் கல்லூரிக்கு மீள அனுப்பப்படும். அதன் பிறகே, செய்முறைத் தேர்வுகளை நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. காலதாமதமாக 13.10.2023-க்குப் பிறகு கிடைக்கப்பெறும் தேர்வுக்கால அட்டவணைகள் பரிசீலனைக்கப்படாது எனத் தெரிவிக்கலாகிறது.**

பல்கலைக்கழக ODD Semester / EVEN Semester செய்முறைத்தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவ / மாணவிகள், அந்தந்த ODD / EVEN பருவத்தேர்வில்தான் செய்முறைத் தேர்வுகளை (Practical Examinations) செய்திட இயலும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இதனைத் தங்கள் கல்லூரியில் பயிலும் மாணவ/ மாணவிகளுக்கும், தொடர்புடைய பேராசிரியர்களுக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

…2

மேலும், இறுதிப் பருவம் (ஆறாம்) பயிலும் மாணாக்கர்கள் மட்டும், இதற்கு முன்பாக நடைபெற்ற ஏதேனும் செய்முறைத் தேர்வுகளில் தேர்ச்சிப் பெறாமல் இருப்பின், அவர்கள் எந்த பருவச் செய்முறைத் தேர்வுகளையும் செய்ய அனுமதிக்கப்படுவர்.

தங்கள் கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவர்களின் எழுத்துத் தேர்வுகளுக்கான அகமதிப்பீட்டு மதிப்பெண்களை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்குள் exams1.bdu.ac.in / New Portal-ல் பதிவேற்றம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், New Portal-ல் மேற்குறித்த பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் மட்டுமே செய்முறைத் தேர்வுகளுக்கான மதிப்பெண்களையும், எழுத்துத்தேர்வுகளுக்கான அகமதிப்பெண்களையும் பதிவேற்றம் செய்திடுவதை உறுதிப்படுத்துமாறு முதல்வர்களை வலியுறுத்தி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பதிவேற்றம் செய்யப்படும் அனைத்து மதிப்பெண்களின் அச்சுப்பிரதிகள் எடுத்து அலுவலக நகலாக பராமரிக்க கல்லூரி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலத்தி உரிய காலத்திற்குள் மதிப்பெண்களை பதிவேற்றம் செய்து மாணவ/ மாணவிகளின் தேர்வு முடிவுகள் விரைவாக வெளியிட ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒரு நேரத்திற்கு (Session) பத்து மற்றும் 10-க்குக் குறைவாக மாணாக்கர்களைக் கொண்டுள்ள பாடப்பிரிவுகளுக்குத் தேர்வுக் கால அட்டவணையின்படி அந்தந்த கல்லூரிகளே செய்முறைத் தேர்வுகளை நடத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு நேரத்திற்கு (Session) பத்துக்கு (10-க்கு) மேல் உள்ள மாணாக்கர்களைக் கொண்ட பாடங்களுக்கு பல்கலைக்கழகம் புறத்தேர்வாளர்களை நியமனம் செய்து கல்லூரிகளுக்குத் தெரிவிக்கப்படும். தேர்வு நாளில் புறத்தேர்வாளர் வராதபட்சத்தில் அருகிலுள்ள கல்லூரித் துறை ஆசிரியரைப் புறத்தேர்வாளராக கல்லூரியே நியமணம் செய்து செய்முறைத் தேர்வுகளை நடத்திட வேண்டும். **அன்றைய தினமே, கல்லூரி நியமணம் செய்த புறத்தேர்வாளர் குறித்த விவரத்தைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.**

அவ்வாறு நடத்தும்பொழுது ஏற்கனவே, 10 மற்றும் 10-க்குக் கீழ் உள்ளவாறு பிரித்து செய்முறைத் தேர்வுக்கான கால அட்டவனையை அனுப்பி இருந்தால், ஒரு நேரத்திற்கு (Session) மாணாக்கர்களின் எண்ணிக்கையை 10-க்கு மேல் உள்ளவாறு காலையிலோ அல்லது மாலையிலோ நடத்திடும் வகையில் மாற்றி அமைத்து அருகிலுள்ள கல்லூரியிலிருந்து புறத்தேர்வாளர்களை நியமனம் செய்து செய்முறைத் தேர்வுகளை நடத்திட முதல்வர்களைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இக்கடிதம் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகை அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

**தேர்வு நெறியாளர் (பொ)**

<u>நகல்.:</u>

1. இயக்குநர், தகவலியல் மையம், பாரதிதாசன் பல்கலைகழகம்
2. மந்தனப்பிரிவு - I பாரதிதாசன் பல்கலைகழகம
3. மந்தனப்பிரிவு - II பாரதிதாசன் பல்கலைகழகம
4. கணக்குப்பரிவு - பாரதிதாசன் பல்கலைகழகம
5. கணிணிப்பரிவு (U.G).
6. B.A/B.B.A/B.Com., B.Sc., பாடப்பிரிவுகள்
7. Stock File